‘ஃபின்டெக்’ துறையில் செயல்படும் நிறுவனங்களின் வளர்ச்சியை ஊக்குவிக்க

ஒன்றிய அரசு மேற்கொண்ட நடவடிக்கைகள் என்ன?

மக்களவையில் தயாநிதி மாறன் கேள்வி!

புதுடெல்லி, ஆக. 6 - ‘ஃபின்டெக்’ நிறுவனங்களின் வரிக் கொள்கைகள் தொடர்பான தேவைகள் மற்றும் அவர்கள் சந்திக்கும் சவால்களைப் புரிந்துகொள்வதற்காக, ஒன்றிய நிதி அமைச்சகம் ஏதேனும் நடவடிக்கை மேற்கொண்டுள்ளதா என மக்களவையில் எழுத்துப்பூர்வமான பதில்களுக்காக கழக நாடாளுமன்றக் குழுத் துணைத்தலைவரும் மத்திய சென்னை நாடாளுமன்ற உறுப்பினருமான தயாநிதி மாறன் கேள்வி எழுப்பினார்.

அதன் விவரம் வருமாறு :

FinTech துறையில் துறையில் செயல்படும் நிறுவனங்களுக்கு ஏதேனும் வரிச் சலுகைகள் உள்ளதா மற்றும் FinTech துறையில் வளர்ந்து வரும் தொழில்நுட்பங்களின் வளர்ச்சியை ஊக்க வைக்க வரிக் குறைப்புக்களை அறிமுகப்படுத்த ஒன்றிய அரசாங்கம் ஏதேனும் திட்டமிட்டுள்ளதா என கேள்வி எழுப்பினார்

FinTech துறையில் குறிப்பிட்ட வளர்ந்து வரும் தொழில்நுட்பங்களான Blockchain, AI மற்றும் டிஜிட்டல் பேங்க்கிங் கண்டுபிடிப்புகளில் ஈடுபட்டு வரும் நிறுவனங்களுக்கு ஏதேனும் வரிச் சலுகை ஒன்றிய அரசு வழங்க முன்மொழிகிறதா, அப்படியானால் அந்தச் சலுகைகளைப் பெற FinTech நிறுவனங்கள் என்ன தகுதி பெற வேண்டும் என கேள்வி எழுப்பினார்

பொருளாதாரம் மற்றும் தொழில்துறை, இத்தகைய வரிச் சலுகைகளை அறிமுகப்படுத்துவதன் மூலம் என்ன நன்மைகளை பெறும் என தெரிந்துகொள்ள அரசாங்கம் ஏதேனும் ஆய்வு மேற்கொண்டுள்ளதா, மற்றும் அப்படியானால், அதன் விவரங்கள் என்ன என கேள்வி எழுப்பினார்

FinTech நிறுவனங்களின் வரிக் கொள்கைகள் தொடர்பான தேவைகள் மற்றும் அவர்கள் சந்திக்கும் சவால்களைப் புரிந்துகொள்வதற்காக, FinTech நிறுவனங்களுடன் ஒன்றிய அரசு ஏதேனும் கலந்தாலோசனை மேற்கொண்டுள்ளதா, அப்படியானால், அதன் விவரங்கள் என்ன என கேள்வி எழுப்பினார்.

வீட்டுக்கே பொருட்களைக் கொண்டு வந்து சேர்க்கும்

சேவை (கிக்) தொழிலாளர்களுக்கு இழப்பீடு - பணிப் பாதுகாப்பை உறுதி செய்திடுவீர்!

மாநிலங்களவையில் கழகக் குழுத் தலைவர் திருச்சி சிவா வலியுறுத்தல்!

புதுடெல்லி, ஆக. 6 - வீட்டுக்கே பொருட்களைக் கொண்டு வந்து சேர்க்கும் சேவை (கிக்) தொழிலாளர்களுக்கு இழப்பீடு - பணி பாதுகாப்பை உறுதி செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும் என மாநிலங்களவையில் பேசிய திருச்சி சிவா வலியுறுத்தினார்.

மாநிலங்களவையில் திருச்சி சிவா பேசியதாவது:

வீட்டுக்கே பொருட்களைக் கொண்டு வந்து சேர்க்கும் சேவை தொழிலாளர்களின் (GIG Workers) பாதுகாப்பு பற்றிய முக்கியமான பிரச்சினையில் உங்கள் மூலமாக சிறப்புமிக்க இந்த அவையில் அரசின் கவனத்தை ஈர்க்க விரும்பு கிறேன்.

தனியார் நிறுவனங்களால் சுரண்டப்படும் இந்த தொழிலாளர்களை மீட்டெடுக்க வேண்டும்.நேர கட்டுப்பாடு இன்றி சில தளர்வுகளோடுகிக்பொருளாதாரம் (GIG Economy) வருமானவாய்ப்பு தருவதால் தற்போது 80 லட்சம் பேர் இதில் பணிபுரிகிறார்கள். இந்த தொழிலாளர்களின் எண்ணிக்கை 2030ல் 2.3 கோடியாக உயரும் என்று நிதி ஆயோக் அறிக்கை குறிப்பிடுகிறது.

போதுமான பாதுகாப்பின்மையாலும் மரியாதை குறைவான நடத்தைகளினாலும் இந்த தொழிலாளர்கள் மிகவும் கடுமையாக பாதிக்கப்படு கிறார்கள்.

80 லட்சம் பேர் பணியாற்றுகின்றனர்!

கொரோனா .. பெருந் தொற்றுக் காலத்தில் ஒட்டுனர்களாக, வீடுகளுக்கு நேரடியாக சென்று பொருட்களை சேர்ப்பவர்களாக, முகவர்களாக பணியாற்றிய இந்த கிக் தொழிலாளர்களின் பங்கு , இவர்களின் முக்கியத்து வத்தையும் பொருளாதாரத்திற்கு தந்த பங்களிப்பையும் தெளிவாக உணர வைத்தது.!

யார் இந்த கிக் பணியாளர்கள் என்பது பலரின் கேள்வியாக உள்ளது. சொமாட்டோ ஸ்விக்கி, டன்சோ, ஓலா, ஊபர், (Zomato, Swiggy, Dunzo, Ola, Uber) போன்றவற்றில் பணியாற்றுபவர்கள் தான் இந்த கிக் பணியாளர்கள். 80 லட்சம் பேர் இந்த வேலையை பார்க்கின்றனர்.

ஒட்டுமொத்த உலகமே முடங்கி கிடந்த போது மக்களின் அத்தியாவசிய தேவைகளை இவர்கள் பூர்த்தி செய்தார்கள். இது இவர்களின் மிக மிக முக்கியமான பாராட்டுக்குரிய சேவை.

ஆனால் இப்போது வெளியாகியிருக்கும் பல அறிக்கைகள் இந்த தொழிலாளர்கள் மிகவும் வேதனை தரத்தக்க நிலையில் உள்ளதாக கூறு கின்றன. இவர்களுக்கு நிர்ணயிக்கப்படும் இலக்குகளை சில தவிர்க்க முடியாத காரணங்களினால் எட்ட முடியாதபோது இவர்களுக்கான மருத்துவ காப்பீடு குறைக்கப்படு கிறது அல்லது நீக்கப்படுகிறது. இதன் விளைவாக அவசரகால மருத்துவ தேவையில் அவர்களது குடும்பங்கள் பெரும ளவிற்கு கடுமையாக பாதிக்கப்பட நேர்கிறது.

விபத்து காப்பீடு வழங்கிடுக!

ஒட்டுமொத்த உலகமே முடங்கி கிடந்த போது மக்களின் தேவைகளை இவர்கள் பூர்த்தி செய்தார்கள். இது இவர்களின் மிக மிக முக்கியமான பாராட்டுக்குரிய சேவை. உணவு விநியோக தளத்தில் பணியாற்றும் கிக் தொழிலாளர்களுக்கு எந்தவித குழப்பமும் இல்லாத தெளிவான கொள்கையோடு விபத்து காப்பீடு வழங்க வேண்டும்.

தற்போது உலகளவில் பல நாடுகளில் இந்தத் துறையில் பணியாற்றுபவர்களுக்கு தரப்படும் உரிமைகளும் சலுகைகளும் நம் நாட்டில் இவர்களுக்கும் வழங்கப்பட வேண்டும். வேலை பாதுகாப்பின்மை இவர்கள் ஒற்றுமைக்கு தடையாக உள்ளது. இது இவர்களுக்கு மிகப் பெரிய அளவில் பாதிப்புகளை ஏற்படுத்துகிறது.

அமைப்பு சார்ந்த சேவை தொழிலாளர்களுக்கு கிடைப்பது போல் நன்மைகளும் சலுகைகளும் இவர்களுக்கு கிட்டுவதில்லை .காரணம் கிக் தொழிலாளர்கள் சுதந்திர மான காண்ட்ராக்டர்களாக கருதப்படுவது தான்.!

வேலை செய்யும் பணியாளர்கள் என்பதற்கு பதிலாக அவர்களை பங்குதாரர்கள் என்றும் முகவர்கள் என்றும் அழைக்கிறார்கள். உச்ச நீதி மன்றம் கிக் பணியாளர்களுக்கு சமூக பாதுகாப்பு வழங்கப்பட வேண்டும் என்றும் மகப்பேறு மற்றும் மருத்துவ காப்பீட்டு பலன்கள் வழங்கப்பட வேண்டும் என்றும் கருத்து தெரிவித்துள்ளது. பல்வேறு மாநில சட்ட மன்றங்களில் இந்த கிக் தொழிலாளர்களின் நலனை கருத்தில் கொண்டு நியாயமான சட்ட முடிவுகள் எடுக்கப்பட்டுள்ளன.

தேசிய அளவில் ஒழுங்குபடுத்த கட்டமைப்பை உருவாக்கிடுக!

நான் ஒன்றிய அரசை வலியுறுத்துவது என்னவென்றால் ஒழுங்கமைக்கப்பட்ட துறைத் தொழிலாளர்களைப் போலவே இந்த கிக் தொழிலாளர்களுக்கும் இழப்பீடு மற்றும் பணிப் பாதுகாப்பினை உறுதி செய்ய துரித நடவடிக்கை எடுக்க வேண்டும். கிக் பொருளாதாரத்தை ஒழுங்கு படுத்த தேசிய அளவில் ஒரு கட்டமைப்பை உருவாக்க வேண்டும். சேவைத் துறையில் உள்ள மற்ற தொழிலாளர்களைப் போலவே சரிசமமான தர நிலையை உருவாக்குமாறு வலியுறுத்தி கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு திருச்சி சிவா பேசினார்.

‘அ’ போட்டது வேண்டுமா?

‘அ’ போடாதது வேண்டுமா?

முத்தமிழறிஞர் கலைஞர் கேள்வி!

முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்கள் ஒரு பொதுக் கூட்டத்தில் பேசியது:

“நீதி” க்கு முன்பு ‘அ’ போட்டால் என்ன வரும்?

மக்கள் சொன்னார்கள் “அநீதி”

“நியாயத்திற்கு “முன்னால் ‘ அ’ போட்டால்?

மக்கள் சொன்னார்கள் ‘அநியாயம்”.

“சுத்தம்” முன்னாடி ‘ அ’ போட்டால்?

மக்கள்; “அசுத்தம்”.

மீண்டும் கலைஞர் கேட்டார் “யோக்கியன்” முன்னாடி ‘அ’ போட்டால்?

மக்கள்: “அயோக்கியன்”.

இப்போது சொல்லுங்கள் உங்களுக்கு ‘அ’ போட்டது வேண்டுமா? ‘அ’ போடாதது வேண்டுமா?

மக்கள் சொன்னார்கள்

‘அ’ போடாதது தான் வேண்டும்.

அப்போது கலைஞர் சொன்னார்.

சிந்தியுங்கள் மக்களே.. “அ.தி.மு.க.”விற்கு முன்னால் ‘அ’ போட்டிருக்கிறார்கள்.

தி.மு.க. வா?

அ.தி.மு.க. வா?

எனக் கேட்டார். மக்கள் உடனே தி.மு.க. வேண்டும் என கோஷம் எழுப்பினர்.

முத்தமிழறிஞர் கலைஞர் 6ஆம் ஆண்டு நினைவு நாள் !

தாம்பரம் மாநகரம் முழுவதும் திருவுருவப்படத்திற்கு மலரஞ்சலி!

மாநகரச் செயலாளர் எஸ்.ஆர்.ராஜா எம்.எல்.ஏ. அறிக்கை!

தாம்பரம், ஆக.6 தாம்பரம் மாநகரச் செயலாளர் எஸ்.ஆர்.ராஜா எம்.எல்.ஏ. விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

நாளை (7.8.2024 புதன்கிழமை) காலை 6.00 மணிக்கு நினைவில் வாழும் நம் நெஞ்சம் நிறைந்த தமிழின தலைவர் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் 6 ஆம் ஆண்டு நினைவு நாளை முன்னிட்டு தாம்பரம் மாநகரத்துக்கு உட்பட்ட 70 வட்டங்களிலும் கலைஞர் அவர்களின் திருஉருவப்படம் வைத்து மலர்களால் அலங்கரித்து மாலை அணிவித்திடு மாறும் ஏழை எளியோருக்கு மாணவ -மாணவிகளுக்கு நலத்திட்ட உதவிகள் மற்றும் கலைஞர் அவர்களின் நினைவுகளை போற்றிடும் வகையில் ஒளி ஒலி அமைத்து பேச்சுக்களையும், பாடல்களையும் அமைத்திடு மாறும் அதன்பின் மேற்சொன்ன நிகழ்வுகளை முடித்துவிட்டு தாம்பரம் மாநகர கழகத்தின் சார்பில் எனது தலைமையில் (எஸ்.ஆர்.ராஜா எம்.எல்.ஏ.) மேற்கு தாம்பரம் சண்முகம் சாலையில் காலை 6.00 மணி அளவில் மலர்களால் அலங்கரிக்கப்பட்ட திருவுருவப் படத்திற்கு மாலை அணிவித்து இதய அஞ்சலி செலுத்த உள்ளோம்.

மேற்சொன்ன நிகழ்வில் மேயர், துணை மேயர், மண்டல குழுத் தலைவர்கள், பகுதி கழக செயலாளர்கள், வட்ட செயலாளர்கள், மாமன்ற, இருபால், உறுப்பினர்கள், மாவட்ட, மாநகர, பகுதி, வட்ட நிர்வாகிகள், இளைஞர் அணி, மாணவர் அணி, மகளிர் அணி, தகவல் தொழில்நுட்ப அணி உள்ளிட்ட அணைத்து அணிகளில் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் கலந்துகொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

அதைத்தொடர்ந்து தலைநகர் சென்னையில் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் நினைவிடத்திற்கு சென்று மாலை அணிவித்து வணக்கம் செலுத்த உள்ள கழகத் தலைவர் தமிழ்நாட்டின் முதலமைச்சர் தளபதி அவர்கள் கலந்து கொள்கின்ற அமைதி ஊர்வலத்திலும் அதிக வாகனங்கள் ஏற்பாடு செய்து கழகத் தோழர்கள் கலந்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு அவர் அறிக்கையில் கேட்டுக்கொண்டுள்ளார்.

மாவட்டச் செயலாளர் க.சுந்தர் எம்.எல்.ஏ. தலைமையில்

காஞ்சிபுரத்தில் முத்தமிழறிஞர் கலைஞர் நினைவு நாள் அமைதி பேரணி!

மாநகரச் செயலாளர் சி.கே.வி.தமிழ்ச்செல்வன் அறிக்கை

காஞ்சிபுரம், ஆக.,5 முத்தமிழறிஞர்தமிழினத் தலைவர் கலைஞர் அவர்களின் 6 ஆம் ஆண்டு நினைவு தினத்தை முன்னிட்டு, காஞ்சிபுரத்தில் நாளை மாபெரும் அமைதிப் பேரணி மாவட்டக் கழகச் செயலாளர் க.சுந்தர் எம்.எல்.ஏ. தலைமையில் நடைபெறுகின்றது. இந்த அமைதிப் பேரணியில் மாநகரக் கழகத் தோழர்கள் அனைவரும்தவறாமல் கலந்து கொள்ளும் படி மாநகரக் கழகச் செயலாளர் சி.கே.வி. தமிழ்ச் செல்வன் அறிக்கையில் கேட்டுக் கொண்டுள்ளார். இது குறித்து அவரது அறிக்கை வருமாறு:

தமிழ்நாட்டு மக்களுக்காகவே தன் வாழ்நாள் முழுவதும் அர்ப்பணித்து மக்கள் பணி மேற்கொண்டவர் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் கலைஞர் அவர்களின் சிந்தனையில் தீட்டப்பட்டு செயல்படுத்திய திட்டங்கள் ஏராளம். இன்றைக்கும் தமிழன் தலைநிமிர்ந்து வாழ்கிறான் என்றால் அதற்கு முழு முதற் காரணம் தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா, முத்தமிழறிஞர் கலைஞர் ஆகியோரே காரணமாக அமைந்திருக்கின்றனர்.

தந்தை பெரியார் பகுத்தறிவைப் போதித்தார், பேரறிஞர் அண்ணா கடமை கண்ணியம் கட்டுப்பாடு என்ற தாரக மந்திரத்தை நமக்களித்தார். முத்தமிழறிஞர் கலைஞர் தமிழே தன் மூச்சு என்று வாழ்ந்தவர் ஆவார். அப்பேற்பட்ட முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நினைவு நாள் நாளை.

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நினைவு தினத்தை முன்னிட்டு நாளை (7.8.2024 புதன் கிழமை) அன்று காலை 7 மணிக்கு காஞ்சிபுரம், காந்தி சாலையில் உள்ள தந்தை பெரியார் நினைவு தூணில் இருந்து அமைதி ஊர்வலம் மாவட்டச் செயலாளர் க.சுந்தர் எம்.எல்.ஏ. தலைமையில் புறப்பட்டு மாவட்டக் கழக அலுவலகத்தில் அமைந்துள்ள முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் திருவுருவச் சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தப்படுகிறது.

எனவே இந்நிகழ்ச்சியில் நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், மேயர், மாவட்டக் கழக நிர்வாகிகள், தலைமைச் செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், மாநகரக் கழக நிர்வாகிகள், பகுதிக் கழகச் செயலாளர்கள், வட்டக் கழகச் செயலாளர்கள், மாமன்ற உறுப்பினர்கள், அனைத்து அணிகளின் நிர்வாகிகள் மற்றும் கழக முன்னணியினர், கழகத் தோழர்கள் அனைவரும் நாளை காலை 6.30 மணிக்கே காந்தி ரோடு, தந்தை பெரியார் நினைவு தூண் அருகே வருகை தர வேண்டுமாய் கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வாறு மாநகரச் செயலாளர் சி.கே.வி. தமிழ்ச்செல்வன் விடுத்துள்ள அறிக்கையில் கேட்டுக் கொண்டுள்ளார்.

திருவள்ளூர் கிழக்கு மாவட்டம் கும்முடிப்பூண்டி தொகுதி கும்மிடிப்பூண்டி ஒன்றியம் பெரிய ஓபுளாலபுரம் ஊராட்சியில் நடைபெற்ற மக்களுடன் முதல்வர் முகாமில் பொதுமக்கள் அளித்த கோரிக்கை மனுக்களை பரிசீலனை செய்து தீர்வு காணப்பட்டு சான்றிதழ்களை மாவட்ட கழக செயலாளர் டி.ஜெ.கோவிந்தராஜன் எம்.எல்.ஏ. வழங்கினார். உடன் மு.மணிபாலன், எஸ்.ரமேஷ், ஜி.ரவிக்குமார், இரா.அறிவழகன், மு.பாஸ்கர், மு.வேதச்சாலம், எஸ்.ராமஜெயம், எம். ஜெயசந்திரன், ஆர்.எஸ்.காளாத்தி, எஸ்.உதயகுமார், எம்.கேசவன், அறிவழகன், ஜெயராமன், காளி, கதிரவன், முரளி, ராஜேந்திரன், பிரபாகரன், சித்திக், தியாகு, பாலு, நரேந்திரன், வினோத், பாலுமகேந்திரன், விநாயகம், சரத், பழனி, ஏசு, கௌதம், உள்ளிட்ட கழக நிர்வாகிகள் மற்றும் அரசுத்துறை அலுவலர்கள் பங்கேற்றனர்.

முத்தமிழறிஞர் கலைஞர் 6ஆம் ஆண்டு நினைவு நாள் !

தமிழ்நாடு மாற்றுத் திறனாளிகள் முன்னேற்றச் சங்கம் சார்பில் அமைதிப் பேரணி!

மாநிலத் தலைவர் ரெ. தங்கம் தலைமையில்!

சென்னை, ஆக. 6 - முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நினைவு நாளையொட்டி, ஆகஸ்ட் 7ம் தேதி, தமிழ்நாடு மாற்றுத் திறனாளிகள் முன்னேற்றச் சங்கம் சார்பாக எனது (மாநிலத் தலைவரும்,தமிழ்நாடு அரசு மாற்றுத் திறனாளிகள் நலவாரிய உறுப்பினர் ரெ.தங்கம்) தலைமையில் இணைப்பு சக்கர ஸ்கூட்டியில் அமைதிப் பேரணி நடைபெறுகிறது.

இது குறித்து அவரது அறிக்கை வருமாறு:

முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்களின் பொற்கால ஆட்சியில் ஊனமுற்றோர் என்ற சொல்லை நீக்கியும், மாற்றுத் திறனாளிகள் என பெயர் சூட்டி மகிழ்ந்ததுடன், அவர்களுக்கு தனி நலவாரியம்,தனித் துறையினை அமைத்து, அத்துறையினை தனது நேரடி கட்டுப்பாட்டில் தனி அமைச்சகம் கொண்டுவந்ததுடன்,

வேலைவாய்ப்பில் 4 சதவிகிதம் இட ஒதுக்கீடு, உதவித்தொகை உயர்த்தி வழங்குதல், வீட்டு வசதி வாரியம், நகர்ப்புர வாழ்விட மேம்பாட்டு வாரியத்தில் வீடு ஒதுக்கீடு, சமத்துவபுரத்தில் இடஒதுக்கீடு, கல்வி உதவித்தொகை இரண்டு மடங்கு உயர்த்தி வழங்குதல், அரசு துறைகளில் பணிபுரிவோர்களுக்கு டிசம்பர் 3ம்தேதி உலக மாற்றுத்திறனாளிகள் தினத்தில் ஊதியத்துடன் கூடிய விடுப்பு, மாநிலம் முழுவதும் தனது துணையாருடன் அரசு பேருந்துகளில் சென்று வர கட்டணச் சலுகை உள்ளிட்ட பல்வேறு வரலாற்று சிறப்புமிக்க திட்டங்களை கொண்டுவந்து நிறை வேற்றிய தலைவர் கலைஞருக்கு நன்றி தெரிவிக்கும் விதமாக அவருடைய பெயரில் பல்வேறு நிகழ்ச்சிகளை தொடர்ந்து தமிழ்நாடு மாற்றுத் திறனாளிகள் முன்னேற்றச் சங்கம் நடத்திவரும் நிலையில்,

அவரது நினைவு நாளையும் கடந்த 5 ஆண்டுகாலமாக கடைப்பிடித்து அமைதிப் பேரணி நடந்துவரும் நிலையிலும், இந்தாண்டும் ஆகஸ்ட் 7ம் தேதி, புதன் கிழமை காலை 8.30 மணிக்கு அண்ணாசாலை, ஓமந்தூரார் அரசினர் தோட்டம் வளாகத்தில் அமைந்துள்ள முத்தமி ழறிஞர், தலைவர் கலைஞர் சிலை அருகிலிருந்து, தமிழ்நாடு மாற்றுத்திறனாளிகள் முன்னேற்ற சங்க மாநிலத் தலைவரும், தமிழ் நாடு மாற்றுத் திறனாளிகள் நலவாரிய உறுப்பினரு மான ரெ.தங்கம் தலைமையில் ஏராளமான மாற்றுத் திறனாளிகள் தங்களது இணைப்பு சக்கர (ஸ்கூட்டி) வாகனத்தில் அமைதி பேரணியாகப் புறப்பட்டு, பேரறிஞர் அண்ணா நினைவிடம், அருகில் அமைந்துள்ள தலைவர் கலைஞர் நினைவிடத்தில் மலர் வளையம் வைத்து புகழ் வணக்கம் செலுத்துகின்றனர்.

அமைதிப் பேரணியில் ஏராளமான மாற்றுத் திறனாளிகள் தங்களது இணைப்பு சக்கர ஸ்கூட்டியில் பங்கேற்று மெரினா கடற்கரையில் அமைந்துள்ள தலைவர் கலைஞர் நினைவிடத்தில் மலர்தூவி மரியாதை செலுத்துகின்றனர். எனவே,இந்த அமைதி பேரணியில், சங்க மாநில, மாவட்ட நிர்வாகிகளும், மாற்றுத்திறனாளிகள் தங்களது இணைப்பு சக்கர ஸ்கூட்டியில் பங்கேற்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு தமிழ்நாடு மாற்றுத்திறனாளிகள் முன்னேற்ற சங்க மாநிலத் தலைவர் ரெ.தங்கம் தனது அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

தலைமை மு.இ.ஏழுமலை, முன்னிலை நந்தனம் மதி எம்.சி.!

முத்தமிழறிஞர் 6ஆம் ஆண்டு நினைவு நாள்!

123வது வட்டம் முழுவதும், நினைவஞ்சலி - உணவு வழங்கல்!

சென்னை, ஆக 6- உலகம் முழுவதும் வாழும், தமிழ் மக்களின் மனதில் என்றும் வாழும், நமது முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் அவர்களின், 6ஆம் ஆண்டு நினைவு தினத்தை முன்னிட்டு, நாளை 7.8.2024 புதன்கிழமை காலை, 123வது வட்ட கழகத்தில் உள்ள அனைத்து தெருக்களிலும், முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின், திருஉரு படத்திற்கு, 123வது வட்ட கழகத்தின் சார்பில், கழகத்தினர் மலர் தூவி, மலர் அஞ்சலி செலுத்தி, பொது மக்களுக்கு அறுசுவை உணவு வழங்கும் நிகழ்ச்சி வட்ட செயலாளர் மு.இ.ஏழுமலை தலைமையில், மயிலை மேற்கு பகுதி செயலாளர் மற்றும் நந்தனம் மதி எம்.சி. முன்னிலையில், மா வட்டச் செயலாளர் மயிலை த.வேலு எம்.எல்.ஏ. வழங்குகிறார். அறுசுவை உணவு வழங்கும் தெருக்கள் மற்றும் நிகழ்ச்சி ஏற்பாட்டாளர்கள் வருமாறு.

1. டாக்டர் ரங்கா ரோடு - அறுசுவை உணவு. நிகழ்ச்சி ஏற்பாட்டாளர் வெஃபாஸ் த.பத்மநாபன் - மாவட்ட துணை அமைப் பாளர் சுற்றுச்சூழல் அணி

2. மயிலாப்பூர் சட்டமன்ற அலுவலகம் - அறுசுவை உணவு. நிகழ்ச்சி ஏற்பாட்டாளர் முத்து (எ) ராஜி - பகுதி துணை அமைப் பாளர் வர்த்தகர் அணி

3. வன்னியபுரம் - அறுசுவை உணவு. நிகழ்ச்சி ஏற்பாட்டாளர் - மு.இ.ஏழுமலை - வட்ட செயலாளர்

4. பக்தவச்சலம் தெரு - அறுசுவை உணவு. த சங்கர் - மாவட்ட துணை அமைப்பாளர் அமைப்புசாரா ஓட்டுனர் அணி

5. திருவள்ளுவர் சாலை - அறுசுவை உணவு. டி. ஜெகநாதன் பகுதி பிரதி நிதி மற்றும் குணசேகரன்

இவ்நினைவஞ்சலி நிகழ்ச்சியில், 123வது வட்ட கழகத்திற்குட்பட்ட, மாவட்ட, பகுதி, வட்ட கழக, BLA2 / BLC நிர்வாகிகள், அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், கழக மூத்த முன்னோடிகள் மற்றும் கழக உறுப்பினர்கள் அனைவரும் கலந்து கொண்டு, முத்தமிழறிஞர் கலைஞரின் அவர்களின் திருவுருவப்படத்திற்கு, மலர் தூவி, மலரஞ்சலி செலுத்துகின்றனர்.

சென்னை தென்மேற்கு மாவட்டம் - தியாகராயர் நகர் கிழக்கு பகுதி

141வது வட்டத்தில் கலைஞர் நினைவு நாள்: 4 இடங்களில் உணவு!

ஜெ.கருணாநிதி எம்.எல்.ஏ. வழங்குகிறார்

சென்னை, ஆக. 6 - முத்தமிழ் அறிஞர் தலைவர் கலைஞர் அவர்களின் 6 வது நினைவு நாளை முன்னிட்டு சென்னை தென்மேற்கு மாவட்டம் தியாகராயர்நகர் கிழக்கு பகுதி 141வது வட்டத்தில் 7.8.2024 பிற்பகல் 12. 30 மணிக்கு பின்வரும் இடங்களில் அறுசுவை உண தியாகராயர் நகர் சட்டமன்ற உறுப்பினர் ஜெ.கருணாநிதி அறுசுவை உணவு வழங்குகிறார்.

என்.துரை ஏற்பாட்டில் தியாகராயர் நகர் கிழக்கு பகுதி அலுவலகம், முத்து ரங்கன் சாலை

என்.மகேஸ்வரி தலைமையில் கோடம் பாக்கம் காமராஜர் காலனியிலும்,

ஆர். குணசேகரன் தலைமையில் நியூ போக் சாலையிலும் சட்டமன்ற உறுப்பினர் ஜெ.கருணாநிதி அறுசுவை உணவு வழங்குகிறார்.

இந்நிகழ்ச்சியில் வட்ட கழக நிர்வாகிகள், அனைத்து அணிகளின் அமைப்பாளர்கள் மற்றும் துணை அமைப்பாளர்கள், கழக முன்னோடிகள் மற்றும் கழக தோழர்கள் தவறாமல் கலந்து கொண்டு சிறப்பிக்கும்படி பகுதிக் கழகம் சார்பில் கேட்டுக்கொண்டுள்ளனர்.

அமைச்சர் பி.கே.சேகர்பாபு தலைமையில் - சென்னை கிழக்கு மாவட்

மகளிர் அணி - மகளிர் தொண்டர் அணி ஆலோசனை கூட்டம்!

சுதா தீனதயாளன் - இராஜேஸ்வரி ஸ்ரீதர் வேண்டுகோள்

சென்னை, ஆக. 6 - சென்னை கிழக்கு மாவட்ட செயலாளரும் அமைச்சருமான பி.கே.சேகர்பாபு தலைமையில் சென்னை கிழக்கு மாவட்ட மகளிர் அணி - மகளிர் தொண்டர் அணி மாவட்டத் தலைவர்கள், துணைத் தலைவர்கள், வலைதளப் பொறுப்பாளர்கள், பகுதி அமைப்பாளர்கள், பகுதி துணை அமைப்பாளர்கள், பொதுக்குழு உறுப்பினர்கள், பகுதி துணை செயலாளர்கள், மற்றும் மாமன்ற உறுப்பினர்கள் ஆலோசனைக் கூட்டம் இன்று (6-8-2024) காலை 9.30 மணி அளவில் எம்.கே.டி.. மஹால் ஓட்டேரியில் நடைபெறுகிறது. இதில் கழக ஆக்கப் பணிகள் குறித்து ஆலோசிக்கப்படுகிறது.

எனவே மாவட்ட கழக மகளிர் அணி மகளிர் தொண்டரின் தவறாமல் கூட்டத்தில் பங்கேற்குமாறு கேட்டுக் கொள்கிறோம்.

இவ்வாறு சுதா தீனதயாளன் (அமைப்பாளர் சென்னை கிழக்கு மாவட்டம் திமுக மகளிர் அணி) இராஜேஸ்வரி ஸ்ரீதர், (அமைப்பாளர் சென்னை கிழக்கு மாவட்ட திமுக மகளிர் தொண்டரணி) ஆகியோர் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.